டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637 002.

# தமிழ்த்துறை

2023 - 2024 ஆம் கல்வியாண்டு (ஒற்றைப் பருவம்)

## தாள் : படைப்பிலக்கியம் (21UTAA05)

வழங்கியவர் :

முனைவர் நா.சுபலட்சுமி

உதவிப் பேராசிரியர்

தமிழாய்வுத் துறை

டிரினிடி மகளிர் கல்லூரி,நாமக்கல்

http://www.trinitycollege.in/

# படைப்பிலக்கியம்

- ஒன்றைப்படிக்கும் போது இது படைப்பிலக்கியம் (Creative literature) என்றும் நம்மால் சுட்டிக்காட்ட முடியும்.ஆனால் படைப்பு என்றால் என்ன என்று கேட்டால் விடையளிப்பது கடினம்.

- பிறவற்றைப் பார்த்துப படியெடுக்கப்படாத,பார்த்து எழுதப்படாத இலக்கிய வகைகள் எல்லாம் படைப்பு இலக்கியங்களே,கவிதை,நாவல்,சிறுகதை,நாடகம் ஆகியன இவ்வகையில் படைப்பிலக்கியங்களே.

- மனிதனின் மனத்துள் ஓடிமாற்றம் பெறுகின்ற எல்லாமே படைப்புத்தாம்.

- நமது படைப்பு ஆர்வத்திற்கும் படைப்பு வெளியீட்டுக்கும் இடையே நம் மனதில் நேர்கிற ஒன்றான படைப்புத்திறனை அடிப்படையாகக் கொண்ட எல்லாமே படைப்புகள்தாம்.

# படைப்பிலக்கிய வேறுபாடு

- பொதுவாக படைப்பு என்பது அனுபவம் பரிமாறல் எனலாம்.
- அனுபவத்திலிருந்து பெற்ற சிந்தனை வளர்ச்சியால் உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு அறிவுறுத்தவும் விளக்கவும் அமைந்தது கட்டுரையில் இன்ன சொற்களுக்கு இன்ன பொருள் என்ற வரையறையின்றி கடைபிடிக்கப்படுகிறது.
- உவமை முதலான உத்திகளுக்குக் கட்டுரையில் இடம் இல்லை. கட்டுரை அறிவு சார்ந்தது:அறிவை ஈர்ப்பது: அறிவு தருவது எதற்குமே கட்டுரை விளக்கம் தருகிறது.
- கதை என்பது நாவல் சிறுகதை நாடகம் ஓரங்க நாடகம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

# படைப்புணர்வு

- படைப்புணர்வைப் பொறுத்தவரை கவிதை,கதை (நாடகம், நாவல், சிறுகதை ஓரங்க நாடகம்) ஆகியவற்றுக்கும் கட்டுரைக்கும் வேறுபாடு இருக்கிறது
- தகவல்களை ஒன்று திரட்டிப் பல புள்ளி விவரங்களுடன் அப்படியே அறிக்கையாக அளிப்பது கட்டுரையாகிறது. தகவல்களைக் கொண்டு தங்கள் அனுபவத்தின் வாயிலாக ஓர் உண்மையை உருவாக்கி அதிலிருந்து
- கற்பனை ஆற்றலால் கவிதை நாவல், சிறுகதை நாடகம் ஓரங்க நாடகம் என்று படைப்பதால் இப்படைப்பாளர்கள் கட்டுரையாளர்களைவிட மிகுதியான படைப்புணர்வைப் பெறுகிறார்கள்.

# படைப்புக்கான காரணம்

- எப்படியோ ஓர் அனுபவத்தைப் படைப்பாளி பெற்றுவிடுகின்றனர்.
- அது அடுத்தவருக்கும் சொல்லத்தக்கதாக இருக்கிறது. அனுபவம் மட்டுமின்றிப் பார்த்தவை படித்தவை கற்பனையானவை எல்லாமே பிறருக்குச் சொல்லத்தக்கனவாக இருப்பின் படைப்பாகின்றன.
- எழுத்தாளன் தன்னுடைய அனுபவத்தைத் தனக்குத் தெளிவாக்கிக் கொள்ளவும் பிறக்குச் சொல்லவும், மொழியின் மூலம் அதைப் பாதுகாக்கவும் படைக்கிறான்.
- ஓர் ஆளது பண்போ காதலோ வெறுப்போ, அவமரியாதையோ, அச்சமூட்டும் நிகழ்ச்சியோ ஏதோ ஓர் அனுபவம் படைப்பின் மூலம் பொருளாக ஆகும். அது கவிதையாகவோ அல்வது கதையாகவோ பிறப்பெடுக்கும்.

# படைப்பிலக்கியத்தின் பயன்

- படைப்பாளர்கள் மக்களுக்குச் சொல்லத்தக்கன என்று நினைப்பவற்றை எல்லாம் வெறுமனே வெளியிட்டு விடுவதில்லை. அவர்கள் தங்கள் அனுபவங்களைக் கொண்டு சில கண்ணோட்டங்களை கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்கிறார்கள்.
- இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் உலக நிகழ்ச்சிகளை எடைபோடுகிறார்கள். கோட்பாட்டின் வழியே நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளிக்கிறார்கள்.

- துத்துவ வாதிகள் போல் வெறும் உண்மைகளை வரட்டுத்தனமாகக் கூறாமல் அழகியல் கலந்து வெளியிடுகிறார்கள்.

- காலங்காலமாக இந்தப் படைப்புகள் மனித வளர்ச்சிக்குக் காரமணமாகின்றன. மனிதவளர்ச்சிக்குக் காரணமான இப்படைப்புகள் சரியாக உருவாக்கப்படவில்லை எனில் தளர்ச்சி ஏற்பட்டுவிடும்.

# படைப்புக்கான ஊக்கம்

- படைப்பாளிகள் இரண்டு காரணங்களுக்காகத் தான் எழுதுகிறார்கள். அவர்கள் படைப்பு படிக்கப்பட வேண்டும் என்பது ஒன்று: பணம் சம்பாதிப்பது இன்னொன்று,தனக்காகவே படைத்துக் கொள்வதாகச் சொல்லும் படைப்பாளிகளும் உள்.

- படைப்பாளன் தான் படைத்த படைப்பை ஒரு வாசகன் போலப் படித்து ரசிக்க முடியாது.

- ஒரு கட்டிடத் தொழிலாளி அவன் கட்டிய வீட்டில் குடியிருக்க முடியும்.

- தையல் தொழிலாளி தானே தைத்தத் துணியை அணிய முடியும்.ஆனால் படைப்பாளி தன் படைப்பைப் படித்து ரசிக்க முடியாது.

- ஒரு வேளை படைத்த வேளையில் அவனுக்கிருந்த மனநோய் வேண்டுமானால் நீங்கியிருக்கலாம்.அந்தப் பயன் மட்டுமே அவன் பெற்றிருக்க முடியும்.

- அந்த அளவுக்கே அவன் தனக்காக எழுத முடியும்.அவன் தன் படைப்பிலுள்ள முருகியல் இன்பத்தை (யுநளவாநவளை தழல) வாசகர் பெறுவது போலப் பெற முடியாது.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/